ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2019/5 - 2017 මැයි මස 15 වැනි සඳුදා - 2017.05.15
2019/5 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### 2016 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, வடமாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை நியதிச்சட்டம்

*2016 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, வடமாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை நியதிச்சட்டத்தின் 62ஆம் பிரிவின் கீழ் வடமாகாண – மீன்பிடி, போக்குவரத்து, வர்த்தக வாணிபம், கிராம அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி மற்றும் மோட்டார் போக்குவரத்து அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

பா. டெனிஸ்வரன்
வடமாகாண மீன்பிடி, போக்குவரத்து, வர்த்தக வாணிபம்,
கிராம அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி மற்றும்
மோட்டார் போக்குவரத்து அமைச்சர்.

வட மாகாணம்,
யாழ்ப்பாணம்,
2017, வைகாசி 15.

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள் 2017ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க, வடமாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

பாகம் I

**பயணி ஏற்றிச்செல்கை அனுமதிப்பத்திரம்**

2. இரண்டாயிரத்துப் பதினாறாம் ஆண்டின் 01 ஆம் இலக்க, வடமாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை நியதிச்சட்டத்தின் பாகம் III இன் ஏற்பாடுகள், (இதனகத்துப்பின்னர் "அனுமதிப்பத்திரம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பயணி ஏற்றிச்செல்கைச் சேவை அனுமதிப்பத்திரத்தின் வழங்குகை தொடர்பாக ஏற்புடையனவாதல் வேண்டும்.

3. ஓர் அனுமதிப்பத்திரத்துக்காக விண்ணப்பிக்க விரும்புகின்றவரான ஆள் ஒவ்வொருவரும் (இதனகத்துப்பின்னர் "அதிகாரசபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகாரசபைக்கு, பொருளளவில் அட்டவணை I இல் தரப்பட்டுள்ள படிவம் 'அ'வில், இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட கட்டணத்துடன் சேர்த்து, விண்ணப்பித்தல் வேண்டும்.


*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

4. மூன்றாம் ஒழுங்குவிதியின் கீழான ஒவ்வொரு விண்ணப்பகாரரும், 2016ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க, வடமாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை நியதிச்சட்டத்தின் 13ஆம் பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாட்டுடன் சேர்த்து, பின்வருவனவற்றை, அவற்றின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியொன்றுடன் சமர்ப்பித்தல் வேண்டும்:-

(அ) மோட்டார் வாகன ஆணையாளர் தலைமையதிபதியினால் வழங்கப்பட்டதும், விண்ணப்பம் எந்தப் பேரூந்து தொடர்பானதோ அந்தப் பேரூந்தினதுமான சான்றிதழ்;

(ஆ) 2016 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, வடமாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை நியதிச்சட்டத்தின் 15ஆம் பிரிவின் நியதிகளின்படி அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்பட்டதும், விண்ணப்பம் எந்தப் பேரூந்து தொடர்பானதோ அந்தப் பேரூந்தினதுமான தகுதிச் சான்றிதழ்;

(இ) அவரது பெயரில் மூன்றாந்திறத்தவர் அபாயங்களுக்கெதிராகச் செல்லுபடியான வரையறுக்கப்படாத காப்புறுதியும் அத்தகைய பேரூந்தின் பயணிகளுக்கான காப்புறுதிக் காப்பீடும்;

(ஈ) அத்தகைய பேரூந்துக்கான செல்லுபடியுள்ளவோர் அரசிறை உரிமம்;

(உ) ஒரு தனியாளின் விடயத்தில், தேசிய அடையாள அட்டை அல்லது ஒரு கம்பனியின் விடயத்தில் கூட்டிணைப்புச் சான்றிதழ்;

(ஊ) அத்தகைய பேரூந்தில் தொழிலுக்கமர்த்தப்படுவதற்கு உட்கருதப்படுகின்ற சாரதியின் மருத்துவச் சான்றிதழ்;

(எ) அத்தகைய சாரதியின் சாரதி உரிமம்; அத்துடன்

(ஏ) அத்தகைய பேரூந்து வடமாகாணம் தவிர்ந்த வேறேதேனும் மாகாணத்தில் போக்குவரத்துச் சேவைகளில் ஈடுபடுத்தப்பட்டிருப்பின், இயைபான மாகாணத்தின் தகுதிவாய்ந்த அதிகாரியினால் வழங்கப்பட்டவொரு பொறுப்புவிடுவிப்புக் கடிதம்.

5. விண்ணப்பமொன்றைப் பெற்றதன்மேல், அதிகாரசபை திருப்திப்படுவதன்மீது, 2016 ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க, வடமாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை நியதிச்சட்டத்தின் 20ஆம் பிரிவின் நியதிகளின்படி விண்ணப்பகாரருக்கு அனுமதிப்பத்திரமொன்றை அதிகாரசபை வழங்குதல் வேண்டும்.

6. ஒவ்வோர் அனுமதிப்பத்திரமும் மற்றும் காற்றுத்தடை கண்ணாடிச்சிட்டை, பொருளளவில் முறையே இதற்கான அட்டவணைகள் III மற்றும் IV என்பவற்றில் தரப்பட்டுள்ளவொரு படிவத்தில் இருத்தல் வேண்டும்.

7. (1) ஓர் அனுமதிப்பத்திரத்தைப் புதுப்பிப்பதற்கான ஒவ்வொரு விண்ணப்பமும், இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட கட்டணத்துடன் சேர்த்து, பொருளளவில் அட்டவணை I இல் தரப்பட்டுள்ள படிவம் “ஆ” வில் செய்யப்படுதல் வேண்டும்.

(2) பின்வரும் ஆவணங்கள், 4ஆம் ஒழுங்கு விதியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஆவணங்களுடன் (1)ஆம் பந்தியின் கீழான விண்ணப்பத்துடன் சேர்த்துச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்:-

(அ) விண்ணப்பம் எந்தப் பேரூந்து தொடர்பானதோ அந்தப் பேரூந்தின் அனுமதிப்பத்திரமும் அதன் பிரதியும்; அத்துடன்

(ஆ) காற்றுத்தடை கண்ணாடிச்சிட்டை அதன் பிரதியும்.

8. பேரூந்திலான மாற்றம் ஏற்படும் பட்சத்தில், விண்ணப்பமொன்று, இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட கட்டணத்துடன் சேர்த்து, பொருளளவில் அட்டவணை I இல் தரப்பட்டுள்ள படிவம் ‘இ’ இல் செய்யப்படுதல் வேண்டும். ஒழுங்குவிதி 7 இன் (2) ஆம் பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட ஆவணங்கள், விண்ணப்பத்துடன் சேர்த்துச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

9. வழி அனுமதிப்பத்திரத்தில் திருத்தம் ஏற்படும் பட்சத்தில், விண்ணப்பமொன்று, இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட கட்டணத்துடன் சேர்த்து, பொருளளவில் அட்டவணை I இல் தரப்பட்டுள்ள படிவம் 'ஈ' இல் செய்யப்படுதல் வேண்டும். ஒழுங்குவிதி 7 இன் (2) ஆம் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஆவணங்கள், விண்ணப்பத்துடன் சேர்த்துச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

பாகம் II

**பயணி ஏற்றிச்செல்கைச் சேவை அனுமதிப்பத்திரத்தின் நியதிநிபந்தனைகள்**

10. பொதுவான நியதிநிபந்தனைகள் பின்வருமாறாதல் வேண்டும்:-

(அ) ஒவ்வோர் அனுமதிப்பத்திரமும் வழங்குகைத் திகதியிலிருந்து ஓராண்டுக் காலப்பகுதிக்குச் செல்லுபடியுடையதாதல் வேண்டும்;

(ஆ) காற்றுத்தடை கண்ணாடிச்சிட்டை பிரதியொன்று, முற்புறக் கண்ணாடித்திரையின் இடதுபக்கத்தில் ஒட்டப்படுதல் வேண்டும்; அத்துடன்

(இ) சாரதியும் நடாத்துநரும் கடமை புரிகையில் அதிகாரசபையினால் அங்கீகரிக்கப்பட்ட சீருடையை அணிதல் வேண்டும்.

11. பின்வரும் ஆவணங்கள் எல்லா நேரங்களிலும் பேரூந்தில் இருத்தல் வேண்டும்:-

(அ) அனுமதிப்பத்திரம்;

(ஆ) காற்றுத்தடை கண்ணாடிச்சிட்டை ;

(இ) பேரூந்தின் தகுதிச் சான்றிதழ்;

(ஈ) சாரதியின் மருத்துவச் சான்றிதழ்;

(உ) அதிகாரசபையினால் அங்கீகரிக்கப்பட்ட நேரசூசி;

(ஊ) நிகழ்வுகள் பற்றிய நிகழ்வுப் பதிதாள்;

(எ) அரசிறை உரிமம்;

(ஏ) காப்புறுதிச் சான்றிதழ்;

(ஐ) சாரதியின் உரிமம்; அத்துடன்

(ஒ) முதலுதவிப்பெட்டி, மேலதிகசில்லு, சில்லுயர்த்தி, சில்லலுத்தி மற்றும் தீயணைப்பான்.

12. அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர் பின்வரும் பொறுப்புக்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர், நேரசூசிக்கிணங்கப் போக்குவரத்துச் சேவையில் பேரூந்தை ஈடுபடுத்துதல் வேண்டும் என்பதுடன், நியாயமான ஏதேனும் ஏதுவின்றிச் சேவைகளின் எண்ணிக்கையைக் குறைத்தலுமாகாது;

(ஆ) அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர், செல்லுபடியான காரணமின்றி ஆறுமாதங்களுக்கு மேற்பட்டவொரு காலப்பகுதிக்குப் பேரூந்தைத் தொழிற்படுத்துவதற்குத் தவறுகின்றவிடத்து, அத்தகைய அனுமதிப்பத்திரம் இல்லாதாக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்;

(இ) விபத்தொன்று ஏற்படும் பட்சத்தில், நியாயமானவொரு காலப்பகுதியினுள் அத்தகைய விபத்துப்பற்றி அதிகாரசபைக்கு அறிவிப்பது அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவரின் கடமையாதல் வேண்டும்;

(ஈ) ஏழுநாட்களுக்கு மேற்பட்டவொரு காலப்பகுதிக்குப் பேரூந்தொன்று சேவையில் ஈடுபடுவதற்குத் தவறுமிடத்து அதிகாரசபைக்கு அறிவிப்பதும் மற்றும் அனுமதிப்பத்திரத்தையும், நிகழ்வுகள் பற்றிய குறிப்புப் புத்தகத்தையும், காற்றுத்தடை கண்ணாடிச்சிட்டையையும் கையளிப்பதும் அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவரின் கடமையாதல் வேண்டும்;

(உ) (i) பாரிய விபத்தொன்று ஏற்படுமிடத்து, அத்தகைய பேரூந்து, அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திடமிருந்து புதிய தகுதிச் சான்றிதழொன்றைச் சமர்ப்பிக்காமல் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடுத்தப்படுதலாகாது; அத்துடன்

(ii) பந்தி (i) இன்கீழ் பேரூந்தின் சாரதி, அவர் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடுவதற்குத் தகுதியானவரென்ற பொருள்பட்ட மருத்துவச் சான்றிதழொன்றைச் சமர்ப்பித்தாலொழிய, போக்குவரத்துச் சேவையில் ஈடுபடுவதற்கு அனுமதிக்கப்படுதலாகாது;

(ஊ) பேரூந்தானது, அதிகாரசபையிடமிருந்தான அங்கீகாரத்தின்மீதன்றி வாடகைக்குக் கொடுக்கப்படுதலாகாது;

(எ) அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர் ஒவ்வொரு மாதத்தினதும் முடிவிலும் அல்லது அதற்கு முன்னரும் சேவை விதிப்பனவைச் செலுத்துதல் வேண்டும்;

(ஏ) பேரூந்தானது சுத்தமாகவும், வீதியில் செல்தகு நிலைமையிலும், பொறிமுறையில் சேவைக்குத் தகுதியானதாகவும் இருப்பதனை அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர் உறுதிப்படுத்துதல் வேண்டும்;

(ஐ) அனுமதிப்பத்திரம் எந்த வழி இலக்கத்துக்கு வழங்கப்படுகின்றதோ அந்த வழி இலக்கம், பேரூந்தின் முற்புறத்தின் மற்றும் பிற்புறத்தின்மீது தெளிவாக வெளிக்காட்டி வைக்கப்படுதல் வேண்டும்;

(ஒ) புறப்படுமிடமும் சேரிடமும் தமிழ், சிங்கள மற்றும் ஆங்கில மொழிகளில் வெளிக்காட்டி வைக்கப்படுதல் வேண்டும்;

(ஓ) 'புகைத்தல் தடைசெய்யப்பட்டுள்ளது' என்ற வாசகம் பேரூந்தின் நுழைவாயிலில் அல்லது அதனுள் வெளிக்காட்டிவைக்கப்படுதல் வேண்டும்;

(ஔ) வலதுபக்க முற்புற ஆசனமொன்று மதகுருமாருக்காக ஒதுக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், "மதகுருமார்" என்ற வாசகம் பேரூந்தின் அந்தப் பக்கத்தின்மீது வெளிக்காட்டிவைக்கப்படுதலும் வேண்டும்;

(க) இடதுபக்க முற்புற ஆசனமொன்று மாற்றுத்திறனாளிகளுக்காக ஒதுக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், 'அங்கவீனமுற்ற ஆள்' என்ற வாசகம் பேரூந்தின் அந்தப் பக்கத்தின்மீது வெளிக்காட்டிவைக்கப்படுதலும் வேண்டும்;

(ங) நுழைவாயிலுக்கண்மையில் இடதுபக்க முற்புற ஆசனமொன்று கர்ப்பிணித் தாய்மாருக்காக ஒதுக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், 'கர்ப்பிணித் தாய்' என்ற வாசகம் பேரூந்தின் அந்தப் பக்கத்தின்மீது வெளிக்காட்டிவைக்கப்படுதலும் வேண்டும்;

(ச) இயைபான கட்டணத்தைச் செலுத்தும்படியும், பயணச்சீட்டொன்றைப் பெறும்படியும், சேரிடம்வரை அதனை வைத்திருக்கும்படியும் பயணிகளைத் தேவைப்படுத்துகின்ற அறிவித்தலொன்று பேரூந்தில் வெளிக்காட்டி வைக்கப்படுதல் வேண்டும்;

(ஞ) அனுமதிப்பத்திர இலக்கம் பேரூந்தினுள் வெளிக்காட்டிவைக்கப்படுதல் வேண்டும்;

(ட) சிறந்த இயங்குநிலையிலுள்ள மணிக்கூடொன்று பேரூந்திலிருத்தல் வேண்டும்;

(ண) பயணியொருவர் எந்தத் தொலைபேசி இலக்கத்துக்கு எவையேனும் இன்னல்கள் பற்றி முறைப்பாடு செய்யலாமோ அந்தத் தொலைபேசி இலக்கம் பேரூந்தினுள் வெளிக்காட்டிவைக்கப்படுதல் வேண்டும்.

இவ்வொழுங்குவிதியின் நோக்கத்துக்காக, பாரிய விபத்து என்பது பின்வருவனவற்றை உள்ளடக்கும்:-

(அ) மரணத்தை விளைவிக்கும் விபத்து;

(ஆ) சாரதியின்பாலான பாரதூரமான அசட்டை காரணமாக ஏற்பட்ட விபத்து;

(இ) எந்த விபத்தின்மூலம் ஊறுற்ற ஆளொருவர் ஏழுநாட்களுக்கு மேற்படச் சிகிச்சைக்காக மருத்துவ மனைக்கு அனுமதிக்கப்படுகின்றாரோ அந்த ஏதேனும் விபத்து.

13. பேரூந்தின் சாரதி பின்வரும் பொறுப்புக்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) சாரதியொருவர், நிகழ்வுகள்பற்றிய நிகழ்வுப் பதிதாளைத் தனது கட்டுக்காப்பில் வைத்திருத்தல்வேண்டும். அவர் புறப்படும் நேரத்தையும் வந்துசேரும் நேரத்தையும் பதிதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய பதிவுகள் பேரூந்து நிலையக் கட்டுப்பாட்டாளரினால் அல்லது நேரக்கணிப்பாளரினால் சான்றுப்படுத்தப்படுதலும் வேண்டும்;

(ஆ) சாரதியொருவர், அனுமதிப்பத்திரத்தையும் காற்றுத்தடை கண்ணாடிச்சிட்டையும் பேரூந்தில் வைத்திருத்தல் வேண்டும்;

(இ) சாரதியொருவர் பயணிகளின் காப்பையும் சௌகரியத்தையும் உறுதிப்படுத்துதல் வேண்டும்;

(ஈ) பேரூந்தில் போதிய இடமிருந்தால், பயணிகள் பேரூந்தினுள் ஏறுவதனையும் அதிலிருந்து இறங்குவதனையும் இயலச்செய்வதற்கு அங்கீகரிக்கப்பட்ட ஒவ்வொரு பேரூந்து நிறுத்திடத்திலும் சாரதியொருவர் பேரூந்தை நிறுத்துதல் வேண்டும்;

(உ) சாரதியொருவர் பேரூந்தைச் செலுத்துகையில் மதுபானம் மற்றும் போதைப்பொருட்களை உட்கொண்டவராக இருத்தலாகாது;

(ஊ) சாரதியொருவர், அங்கீகரிக்கப்பட்ட பேரூந்து நிறுத்திடங்கள் தவிர்ந்த வேறெந்த இடத்திலும் பேரூந்தினுள் ஏறுவதற்கு அல்லது அதிலிருந்து இறங்குவதற்குப் பயணிகளை அனுமதித்தலாகாது;

(எ) சாரதியொருவர், அசட்டையான அல்லது ஆபத்தானவொருமுறையில் பேரூந்தைச் செலுத்துதலாகாது;

(ஏ) சாரதியொருவர், பேரூந்தின் மிதிபலகையில் எவரேனும் பயணியைப் பயணஞ்செய்வதற்கு அனுமதித்தலாகாது;

(ஐ) பேரூந்தின் ஒவ்வொரு சாரதியும் அதிகாரசபையிடம் பதிவுசெய்யப்படுதல் வேண்டும்;

(ஒ) பேரூந்தானது அட்டவணைப்படுத்தப்பட்ட நேரத்துக்குமுன்னர் ஒரு பேரூந்து நிலையத்தினுட் பிரவேசித்தலோ அல்லது நிறுத்திவைக்கப்படுதலோ ஆகாது, நேரசூசியைக் கண்டிப்பாகப் பின்பற்றுதல் வேண்டும் மற்றும் பேரூந்து நிலையத்தில் உள்ள ஆட்களுக்கு அல்லது கட்டிடத்துக்கு ஏதேனும் சேதத்தைத் தவிர்ப்பதற்குச் சாரதியினால் கவனமாகச் செலுத்தப்படுதல் வேண்டும்;

(ஓ) பேரூந்தானது நியாயமற்ற வேகத்தில் அல்லது ஆபத்தானவொரு முறையில் செல்லுதலாகாது;

(ஔ) சாரதியொருவர், மேலதிக இலாபத்தை ஈட்டும் நோக்கத்துக்காக அல்லது ஏனைய பேரூந்து தொழிற்படுத்துநர்களுக்கு நட்டம் விளைவிப்பதற்குப் பேரூந்தைத் தாமதப்படுத்துதலாகாது;

(க) சாரதியொருவர், சீருடையணிந்துள்ள பரிசோதகர்களுக்கு அல்லது வேறு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்களுக்குத் தனது ஆதரவையளித்தல் வேண்டும்;

(ங) சாரதியொருவர் செல்லிடத் தொலைபேசியைப் பயன்படுத்துதலோ அல்லது பேரூந்தைச் செலுத்துகையில் சாரதியின் கவனத்தை ஈர்க்கின்ற வேறேதேனும் கருமத்தைச் செய்தலோ ஆகாது;

(ச) சாரதியொருவர் அவரது சீருடையில் பெயர்ப்பட்டியொன்றை அணிதல் வேண்டும்;

(ஞ) சாரதியொருவர் பேரூந்திலுள்ள உரத்தொலிப்பானைப் பெரிய சத்தமாகப் போடுதலாகாதென்பதுடன், பால்ரீதியில் திசைப்படுத்தப்பட்ட ஏதேனும் பாட்டை அல்லது திரைப்படத்தை ஒலிபரப்புதலோ அல்லது ஒளிபரப்புதலோ ஆகாது.

14. பேரூந்து ஒன்றின் ஒவ்வொரு நடாத்துநரும் பின்வரும் பொறுப்புக்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) நடாத்துநரொருவர் அவரது சீருடையில் பெயர்ப்பட்டி ஒன்றை அணிதல் வேண்டும்;

(ஆ) நடாத்துநரொருவர் சேரிடத்துக்கு இயைபான கட்டணத்தை விதித்தல் வேண்டுமென்பதுடன், பயணச்சீட்டொன்றைக் கொடுத்தலும் வேண்டும்; அத்துடன் பேரூந்து சேரிடத்தைச் சென்றடையத் தவறினால் நடாத்துநர் மீதித்தூரத்துக்குப் பயணஞ்செய்வதற்குக் கட்டணத்தை மீளளித்தல் வேண்டுமென்பதுடன், மிதமிஞ்சிய பேரூந்துக் கட்டணத்தை விதித்தலுமாகாது;

(இ) பயணியொருவர் அமர்ந்துள்ள ஏதேனும் ஒதுக்கப்பட்ட ஆசனம், அவ்வாசனம் எந்த ஆளுக்காக ஒதுக்கப்பட்டதோ அந்த ஆள் பேரூந்தினுள் ஏறினால் அத்தகைய ஆளுக்குக் கொடுக்கப்படுதல் வேண்டுமென்பதை நடாத்துநர் உறுதிப்படுத்துதல் வேண்டும்;

(ஈ) நடாத்துநரொருவர் கடமையிலிருக்கையில் மதுபானத்தை அல்லது போதைப்பொருட்களை உட்கொள்ளுதலாகாது;

(உ) நடாத்துநரொருவர், பேரூந்தின் மிதிபலகையில் எவரேனும் பயணியைப் பயணஞ்செய்வதற்கு அனுமதித்தலாகாது;

(ஊ) நுழைவாயிலைத் தடைசெய்யும் ஒருமுறையில் பயணியொருவர் தனது பயணப்பொதிகளை இடுவதற்கு நடாத்துநரொருவர் அவருக்கு அனுமதியளித்தலாகாது;

(எ) நடாத்துநரொருவர், பேரூந்தில் புகைப்பதற்கு எவரேனும் பயணியை அனுமதித்தலாகாது;

(ஏ) நடாத்துநரொருவர் பயணிகளை மரியாதையாக நடாத்துதல் வேண்டுமென்பதுடன், அவரது கடமையை மாண்புமிக்க முறையில் நிறைவேற்றுதலும் வேண்டும்;

(ஐ) பேரூந்தொன்றின் நடாத்துநர் அதிகாரசபையிடம் பதிவுசெய்யப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஒ) நடாத்துநரொருவர், பேரூந்திலுள்ள உரத்தொலிப்பானைப் பெரிய சத்தமாகப் போடுதலாகாதென்பதுடன், பால்ரீதியில் திசைப்படுத்தப்பட்ட ஏதேனும் பாட்டை அல்லது திரைப்படத்தை ஒலிபரப்புதலோ அல்லது ஒளிபரப்புதலோ ஆகாது.

15. தற்காலிக அனுமதிப்பத்திரமொன்று வழங்கப்பட்டுள்ள எவரேனுமாள், இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட கட்டணத்துடன் சேர்த்து இவ்வொழுங்குவிதிகளின் கீழான அனுமதிப்பத்திரத்துக்காக விண்ணப்பிக்கலாம்.

## பாகம் III

### பயணிகளின் பொறுப்புக்கள்

16. பயணி ஒவ்வொருவரும் பின்வரும் பொறுப்புக்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) ஒரு பயணி அமர்ந்திருக்கும் ஒதுக்கப்பட்ட ஆசனம், அவ்வாசனம் எவ்வாளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளதோ அவ்வாள் பேரூந்தினுள் ஏறினால் அத்தகைய ஆளுக்குக் கொடுக்கப்படுதல் வேண்டும்;

(ஆ) பயணியொருவர் பேரூந்தினுள் ஏறிய பின்னர் உடனடியாகப் பேரூந்துக் கட்டணத்தைச் செலுத்திப் பயணச்சீட்டைப் பெறுதல் வேண்டும்;

(இ) பயணியொருவர் அப்பயணச்சீட்டைப் பயணத்தின் முடிவுவரை தனது கட்டுக்காப்பில் வைத்திருத்தல் வேண்டும்;

(ஈ) நடாத்துநரொருவரினால் அல்லது பரிசோதகரொருவரினால் பயணச்சீட்டைக் காண்பிக்கும்படி தேவைப்படுத்தப்படும்போது பயணியொருவர் அவ்வாறு செய்தல் வேண்டும்;

(உ) பயணியொருவர், மற்றைய பயணிகளுடனும் நடாத்துநருடனும் மாண்புமிக்கமுறையில் நடந்துகொள்ளுதல் வேண்டும்;

(ஊ) பயணியொருவர், தடைசெய்யப்பட்ட பண்டங்களைக் கொண்டு செல்லுதலாகாது.

பாகம் IV

**பேரூந்து நிலையம்**

17. ஆளெவரும்-

(அ) அதிகாரசபையிடமிருந்து பெறப்பட்ட அங்கீகாரத்துடன்தவிர, பேரூந்து நிலையத்தில் ஏதேனும் அறிவித்தலை, படத்தை அல்லது துண்டுப்பிரசுரத்தை வெளிக்காட்டிவைத்தலாகாது;

(ஆ) பேரூந்து நிலையத்தில் ஏதேனும் அதிகாரமளிக்கப்படாத தொழிலில் ஈடுபடுதலாகாது;

(இ) பேரூந்து நிலையத்திலுள்ள எவரேனும் பயணிக்கு, பேரூந்துத் தொழிற்படுத்துநருக்கு அல்லது ஊழியருக்கு முட்டுக்கட்டையிட்டு எவையேனும் குழப்பங்களை விளைவித்தலாகாது;

(ஈ) அதிகாரசபையிடமிருந்து பெறப்பட்ட அங்கீகாரத்தின்மீதுதவிர, ஒலிபரப்பியை அல்லது வேறெவையேனும் கருவிகளைப் பயன்படுத்துவதன்மூலம் சத்தமிடுதலாகாது;

(உ) பேரூந்துக்குப் பயணிகளைக் கூப்பிடுதலுட்பட, ஏதேனும் நோக்கத்துக்காகப் பேரூந்து நிலையத்திலுள்ள எவரேனுமாளுக்குத் தொல்லை விளைவிக்கும் முறையில் கத்திச் சத்தமிடுதலாகாது.

பாகம் V

**ஒன்றிணைந்த நேரசூசி**

18. அதிகாரசபையானது ஒன்றிணைந்த நேரசூசியொன்றைத் தயாரித்து அதனை வினைத்திறனானமுறையிலும் பயனுள்ளவகையிலும் வலுவுறுத்துதல் வேண்டும். ஒன்றிணைந்த நேரசூசியொன்றைத் தயாரிப்பதில், மக்களின் தேவைகள் கவனத்துட்கொள்ளப்படுதல் வேண்டுமென்பதுடன், பேரூந்துச் சேவையின் மொத்த எண்ணிக்கை, தனியார் பேரூந்துத் தொழிற்படுத்துநர்களுக்கு அறுபது சதவீதமாகவும் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு நாற்பது சதவீதமாகவும் குறித்தொதுக்கப்படுதலும் வேண்டும்.

பாகம் VI

**பொது ஏற்பாடுகள்**

19. வடமாகாணத்தினுட் பிரவேசிக்கும் ஒவ்வொரு பேரூந்தும் இவ்வொழுங்குவிதிகள் அதற்கு ஏற்புடையனவாகும் அளவுக்கு அவற்றுக்கு அமைந்ததாதல் வேண்டும்.

20.இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளை மீறுகின்ற எவரேனுமாள் தவறொன்றைப் புரிகின்றார் என்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்கவிளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது இரண்டாண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

**அட்டவணை I**

(ஒழுங்குவிதி 3)

படிவம் 'அ'

**பயணிகள் சேவை அனுமதிப்பத்திரத்திற்கான விண்ணப்பப்படிவம்**

(சாதாரண/அரைச்சொகுசு/சொகுசுச்சேவை)

**வடமாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை**

| | |
|---|---|
| 01. **பேரூந்துவின் பதிவு செய்யப்பட்ட சொந்தக்காரர் சம்பந்தமான தகவல் :** | பேரூந்து இலக்கம்………..<br>(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்) |
| | அலுவலக உபயோகத்திற்கு |
| 1.1 முழுப்பெயர்:……………………………………………………………...………..<br>(தமிழ் மொழியில்) | |
| (முழுப்பெயர்)………………………………………………………………….……….<br>………………………………………………………………………….……….<br>(ஆங்கில மொழியில்) | |
| 1.2 விலாசம்:…………………………………………………………….……………<br>…………………………………………………………………………………..... | |
| 1.2.1 தொலைபேசி இலக்கம் :……………………………………………..…………... | |
| 1.3 தேசிய அடையாள அட்டை இலக்கம் : …………………………………….……… | |
| 1.3.1 கம்பனி பதிவு இல. : ……………………………………………………… | |
| 1.4 மாகாணம்:………………………………………………………….……… | |
| 1.5 மாவட்டம் : ………………………………………………...……………… | |
| 1.5.1 பிரதேச செயலாளர் பிரிவு: ……………………....…………………........ | |
| 1.6 பேரூந்துவின் பெறுமதி : ……………………………….………………… | |
| 1.6.1 விண்ணப்பகாரர் கடன் பெற்றிருந்தால் பின்வரும் விவரங்களைத் தரவும். | |
| 1.6.2 வங்கியின் / நிதிக் கம்பனியின் பெயர் : ……………..…………..……………… | |
| 1.6.3 பெற்றுள்ள கடன் - ரூபா :……………………………………...……..…….. | |
| 1.6.4 கடன் பெற்ற திகதி : ………………………………………..…………….... | |
| 1.6.5 தற்போது செலுத்த வேண்டிய மிகுதித் தொகை - ரூபா :…………..…......... | |
| 1.6.6 மிகுதித் தவணைப்பணங்களின் எண்ணிக்கை …………………………..…. | |

*1.7* விண்ணப்பகாரர் வேறு பேரூந்துகளுக்கு அனுமதிப்பத்திரங்கள் பெற்றிருந்தால் அந்த விவரங்களைத் தரவும் :

| *பேரூந்துவின் பதிவு இலக்கம்* | *வழி இலக்கம்* | *அதிகார சபையின் பெயர்* | *அனுமதிப்பத்திர இலக்கம்* | *திகதி* |
|---|---|---|---|---|
| | | | | |

அலுவலக உபயோகத்திற்கு

*2.* **பேரூந்து பற்றிய தகவல்கள்:**

*2.1* பதிவு இலக்கம்: ☐☐☐☐☐☐☐

*2.2* (அ) உற்பத்தி செய்த நாடு :...........................

(ஆ) தயாரிப்பு :................................ (இ) மாதிரி: ....................................

*2.3* அனுமதிக்கப்பட்ட பிரயாணிகள் : ☐☐

*2.4* கதவுகளின் எண்ணிக்கை: ☐☐

*2.5* உற்பத்தி செய்யப்பட்ட ஆண்டு : ☐☐☐☐

*2.6* இலங்கையில் பதிவு செய்யப்பட்ட முதலாவது வருடம் :

☐☐☐☐ ☐☐ ☐☐

ஆண்டு மாதம் திகதி

*2.7* உள் உயரம் : (செ. மீ) ☐

*2.8* நிறை: (கி.கிராம்) :...............................

*2.9* நீர் இந்த பேரூந்திற்கு வேறு ஏதேனுமோர் அதிகாரசபையிடமிருந்து பயணிகள் சேவை அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொண்டதுண்டா? (ஆம்/இல்லை) :.................

அலுவலக உபயோகத்திற்கு

2.9.1 தற்போது பேரூந்து தொழிற்படுத்தப்படுகின்றதா? (ஆம்/இல்லை)……….

2.9.2 ஆம் எனில், பின்வரும் தகவல்களைத் தரவும் :

| அதிகார சபை | வழி இலக்கம் | அனுமதிப்பத்திர இலக்கம் | முடிவடையும் திகதி | புதுப்பிக்கப் படாததற்குக் காரணம் |
|---|---|---|---|---|
| | | | | |

2.10 இந்தப் பேரூந்து ஏதேனும் நீதிமன்ற வழக்கில் சம்பந்தப்பட்டுள்ளதா? (ஆம்/இல்லை)……..………..

ஏதேனும் இருந்தால் விவரங்கள் : ……………………………………………….

2.11 பேரூந்தின் தகுதிச் சான்றிதழ் சம்பந்தமான விவரங்கள் :

2.11.1 தொடர் இலக்கம் :……………………………………………….

2.11.2 திகதி ……………………………………………….. (ஆ/ மா/ தி)

2.11.3 ஊர்திச்சாலையின்/ வேலைத்தளத்தின் பதிவு இலக்கம்: ……………..

2.12 காப்புறுதி செய்யப்பட்டது சம்பந்தமான விவரங்கள்:……………………

2.12.1 கம்பனி/ கூட்டுத்தாபனத்தின் விவரங்கள்: ………………………

2.12.2 காப்புறுதி வகை : 1……………………..…………………………

2……………………..……………………………..

3……………………………………………………

2.12.3 முடிவடையும் திகதி :……………… (ஆ/ மா/ தி)

2.13 அரசிறை அனுமதிப்பத்திரம் முடிவடையும் திகதி (ஆ/ மா/தி) ....................

| 3. **தொழிற்படுத்துநர் உத்தேசிக்கும் சேவைகள் சம்பந்தமான தகவல்கள்** | அலுவலக உபயோகத்திற்கு |
|---|---|
| 3.1 வழி இலக்கம் ☐☐☐☐☐☐☐ | |
| 3.2 சேவை ஆரம்பமாகும் இடம் :……………………………………………... | ☐☐☐☐☐☐☐☐☐ |
| 3.2.1 பிரதேச செயலாளர் பிரிவின் பெயர் :…………………………………… | |
| 3.3 சேவை முடிவடையும் இடம்:……………………………………………. | ☐☐☐☐☐☐☐☐☐ |
| 3.3.1. பிரதேச செயலாளர் பிரிவின் பெயர்:…………………………………… | |
| 3.4 முழுக்கட்டணம்: ……………………………………………………... (கட்டண அட்டவணை இணைக்கப்பட்டுள்ளது) | |
| 3.4.1 முழுத்தூரம் (கி. மீ):……………………………………………………. | |
| 3.5 பேருந்து நிறுத்தும் இடம் / சேவை ஆரம்பிக்கும் இடம் சம்பந்தமான விவரங்கள் | |
| 3.5.1 வழி இலக்கம் :…………………………………………………… ☐☐☐☐☐☐☐ | |
| 3.5.2 நிறுத்தி வைக்கும் இடம்:………………………………………….. | |
| 3.5.3 பிரதேச செயலாளர் பிரிவின் பெயர் :………………………………….. | ☐☐☐☐☐☐☐☐☐ |
| 3.5.4 சேருமிடம் : ……………………………………………………. | |
| 3.5.5 பிரதேச செயலாளர் பிரிவின் பெயர் :………………………………….. | |
| 3.5.6 தூரம் (கி.மீ)…………………………………………………… | |
| 3.5.7 கட்டணம் – ரூபா …………………………………………………… | |

| 4. சாரதி பற்றிய தகவல்கள் | அலுவலக உபயோகத்திற்கு |
|---|---|

4.1 முழுப்பெயர் ………………………………………………………………………..
(தமிழ் மொழியில்)

முழுப்பெயர் :……………………………………………………………………….
(ஆங்கில மொழியில்)

4.2 பிறந்த திகதி :………………………………………………………………..

4.3 விலாசம் : ……………………………………………………………………….

4.4 தேசிய அடையாள அட்டை இலக்கம் : …………………………………….

4.5 சாரதி அனுமதிப்பத்திர இலக்கம் …………………………………………….

4.5.1 பெற்ற திகதி :………………..…/…………./………..… (ஆ/ மா/ தி)

4.5.2 முடிவடையும் திகதி :………………..…/…………./………..… (ஆ/ மா/ தி)

4.6 மருத்துவப் பரிசோதனைச் சான்றிதழ் விபரங்கள்:

4.6.1 சான்றிதழ் இலக்கம் :……………………………………………………………..

4.6.2 வழங்கப்பட்ட திகதி :………………..…/…………./………..…..(ஆ/ மா/ தி)

4.6.3 முடிவடையும் திகதி :………………..…/…………./………..…..(ஆ/மா/தி)

4.7 சாரதி, வடமாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையினால் நடாத்தப்பட்ட பயணிகள் சேவை சாரதி அனுமதிப்பத்திரத்துக்கான பயிற்சி நெறியை மேற்கொண்டவரா?

ஆம்/இல்லை :……………………..

4.7.1 பயணிகள் சேவை சாரதி அனுமதிப்பத்திர இலக்கம் :

4.8 எவையேனும் விபத்துக்களில் சம்பந்தப்பட்டிருந்தால்

4.8.1 கடந்த மூன்று வருடங்களில்

விபத்துக்களின் எண்ணிக்கை

| மரணம் விளைவிக்கின்றதான | ஆபத்தான | பெயர் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்

4.8.2 எவையேனும் நீதிமன்ற வழக்குகள் முடிவடையாமல் உள்ளனவா?
ஆம்/இல்லை:...........................

ஆம் எனில் விபரங்களைத் தரவும்.

| | | | |
|---|---|---|---|
| விபத்து நடந்த திகதி | | | |
| வகை | | | |
| ஊருற்றவர்களின் எண்ணிக்கை | | | |
| இறந்தவர்களின் எண்ணிக்கை | | | |
| சொத்துக்களுக்கு ஏற்பட்ட நட்டம் (கிட்டத்தட்ட) | | | |

4.8.3. விபத்திற்குப் பின்பு :

(அ) சாரதி மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டவரா? ஆம்/இல்லை

(ஆ) சாரதி மறுபயிற்சி நெறியை மேற்கொண்டவரா? ஆம்/இல்லை

(இ) சாரதி அனுமதிப்பத்திரம் இடைநிறுத்தி வைக்கப்பட்டதா இல்லாதாக்கப்பட்டதா?

(ஆம்/ இல்லை)........................

5. நடாத்துநர் சம்பந்தமான விவரங்கள்

5.1 முழுப் பெயர் :..................................................................................................
(தமிழ் மொழியில்)

முழுப் பெயர் :..................................................................................................
(ஆங்கில மொழியில்)

5.2 பிறந்த திகதி :..................................................................................................

5.3 விலாசம் :..................................................................................................

5.4 தேசிய அடையாள அட்டை இலக்கம் :......................................................

5.5 பயணிகள் சேவை நடாத்துநர் அனுமதிப்பத்திர இலக்கம் ..................

5.6 இவர் வடமாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையினால் நடாத்தப்பட்ட பயணிகள் சேவை நடாத்துநர் பயிற்சி நெறியை மேற்கொண்டவரா ?
ஆம்/இல்லை

இவ்விண்ணப்பப்படிவத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவையும், சரியானவையும் என நான் உறுதிப்படுத்துகின்றேன். அத்துடன் அனுமதிப்பத்திரம் சம்பந்தமான உடன்படிக்கைகள், சட்டதிட்டங்கள், நிபந்தனைகள், உத்தரவுகள், அறிவுறுத்தல்கள் போன்றவற்றை மீறினால் எனக்கு வழங்கப்படும் அனுமதிப்பத்திரம் இடைநிறுத்தி வைக்கப்படும் அல்லது இல்லாதாக்கப்படும் என்பதை அறிவேன். சட்டதிட்டங்களுக்கு அமைய நான் தண்டிக்கப்படலாம் என்பதையும் நன்றாக அறிவேன்.

தே.போ.ஆ. அதிகாரசபைகள் மூலம் காலத்துக்குக்காலம் அறிமுகப்படுத்தப்படும் நேரசூசிகள், அறவிடப்படும் கட்டணங்கள் சம்பந்தமாக அறிவுறுத்தல்களின்படி பேரூந்துச் சேவையை நடாத்துவேன் என உறுதிப்படுத்துவதுடன், இணக்கம் தெரிவித்துள்ள கட்டணத்திற்கமைய கட்டணம் அறவிடப்படுவதற்கு இணக்கம் தெரிவிக்கின்றேன்.

.......................................
திகதி:............... விண்ணப்பகாரரின் கையொப்பம்

படிவம் 'ஆ'

(ஒழுங்குவிதி 7)

**வ.மா.வீ.ப.போ.அ.ச**

**பயணிகள் சேவை வழி அனுமதிப்பத்திரத்தைப் புதுப்பிப்பதற்கான விண்ணப்பப்படிவம்**

* பேரூந்து இலக்கம் : | | | | | | | | | | வ.மா.ப.சே.அ.ப.இல: NPRPTA / ...........

1. சொந்தக்காரரின் பெயர் : ..........................................................................................

2. வலுவிலுள்ள காப்புறுதி இல. : ............................................. முடிவடையும் திகதி :- ..............

3. வலுவிலுள்ள வாகனத் தகுதிச்சான்றிதழ் இல. :....................... முடிவடையும் திகதி :- ..............

4. வலுவிலுள்ள வாகன அரசிறை அனுமதிப்பத்திர இலக்கம் :........... முடிவடையும் திகதி : ..............

5. சாரதியின் மருத்துவச் சான்றிதழ் இல :- ................................ முடிவடையும் திகதி :-...............

திகதி : .................

....................................
சொந்தக்காரரின் கையொப்பம்

**அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்**

மேற்படி விபரங்கள் மூல ஆவணங்களுடன் ஒப்புநோக்கப்பட்டு முன்னிலைப்படுத்தப்படுகின்றன.

திகதி : ..............

................................
விடய அலுவலர்

மேற்கூறப்பட்ட விபரங்கள் யாவும் சரியானவை என்று உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி : ..............

............................
பிரதம அலுவலர்

பயணிகள் சேவை அனுமதிப்பத்திரம் புதுப்பிக்கப்படுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது/அனுமதிக்கப்படவில்லை.

திகதி : ..............

.............................
மாவட்ட முகாமையாளர்

படிவம் "இ"

(ஒழுங்குவிதி 8)

வ.மா.வீ.ப.போ.அ.ச

**பேரூந்து மாற்றம் செய்வதற்கான விண்ணப்பம்.**

1. சொந்தக்காரரின் பெயர் :....................................................................................................
2. மாற்றம் செய்யும் பழைய பேரூந்தின் பதிவு இலக்கம் :..........................................................
3. வழி அனுமதிப்பத்திர இலக்கம் : NPRPTA / ......................................................................
4. தொழிற்படும் வழி இலக்கம் :.....................................................................................
5. மாற்றம் செய்யும் காரணம் :..........................................................................................
6. மாற்றம் செய்யும் புதிய பேரூந்தின் விபரம்:-
   6.1 பதிவு இலக்கம் :..................................................................
   6.2. உற்பத்தி செய்த நாடு :.......................................................
   6.3. வகை :............................................... ...........................
   6.4. மாதிரி :.........................................................................
   6.5. இலங்கையில் பதிவு செய்த ஆண்டு :......................................
   6.6. உயரம் :..........................................................................
   6.7. இருக்கைகளின் எண்ணிக்கை :...................... ...........................
   6.8. கதவுகளின் எண்ணிக்கை :.....................................................
   6.9. வாகனத்தின் விலை :................................ ...........................
   6.10. நிதி உதவி செய்த வங்கி / நிறுவனம்:- ..................................
   6.11. பெற்றுக் கொண்ட தொகை :...................... ...........................
   6.12 தவணைக் கட்டணத் தொகை :...............................................
   6.13. இன்னும் செலுத்த வேண்டிய முழுத்தொகை :.............................
7. வலுவிலுள்ள காப்புறுதி இல. :........................................... முடிவடையும் திகதி :..............
8. வலுவிலுள்ள வாகனத் தகுதிச் சான்றிதழ் இல. :...................... முடிவடையும் திகதி :..............
9. வலுவிலுள்ள வாகன அரசிறை அனுமதிப்பத்திர இலக்கம் :.......... முடிவடையும் திகதி :..............
10. சாரதியின் மருத்துவச் சான்றிதழ் இல. : .............................. முடிவடையும் திகதி :..............

மேலே 2. இல் தரப்பட்டுள்ள பேரூந்துக்குப் பதிலாக 6.1 இல் குறிக்கப்பட்ட பேரூந்தை மாற்றம் செய்து தருமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

திகதி :........................ .................................
சொந்தக்காரரின் கையொப்பம்

---

**அலுவலகப் பாவனைக்கு மாத்திரம்**

மேற்படி விபரங்கள் மூல ஆவணங்களுடன் ஒப்புநோக்கப்பட்டு முன்னிலைப்படுத்தப்படுகின்றது.

திகதி : ............. ..........................
விடய அலுவலர்

மேற்கூறப்பட்ட விபரங்கள் யாவும் சரியானவை என்று உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி : ............. ..........................
பிரதம அலுவலர்

பேரூந்தை மாற்றம் செய்வதற்கு அனுமதிக்கப்படுகின்றது / அனுமதிக்கப்படவில்லை.

திகதி : ............. ..........................
மாவட்ட முகாமையாளர்

படிவம் 'ஈ'

(ஒழுங்குவிதி 9)

வ.மா.வீ.ப.போ.அ.ச

**வழி அனுமதிப்பத்திரத்தில் திருத்தம் செய்வதற்கான விண்ணப்பப்படிவம்.**

1. சொந்தக்காரரின் பெயர் :..........................................................................................

2. வழி அனுமதிப் பத்திர இலக்கம் : NPRPTA /..........................................................................................

3. திருத்தத்திற்கான காரணம் :..........................................................................................

4. மீளமைக்க வேண்டிய விதம் :..........................................................................................

திகதி :........................ ..................................

சொந்தக்காரரின் கையொப்பம்

**அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்**

மேற்படி விபரங்கள் மூல ஆவணங்களுடன் ஒப்புநோக்கப்பட்டு முன்னிலைப்படுத்தப்படுகின்றன.

திகதி : ............. ..........................

விடய அலுவலர்

மேற்கூறப்பட்ட விபரங்கள் யாவும் சரியானவை என்று உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி : ............. ..........................

பிரதம அலுவலர்

திருத்தம் செய்வதற்கு அனுமதிக்கப்படுகின்றது / அனுமதிக்கப்படவில்லை.

திகதி : ............. .............................

மாவட்ட முகாமையாளர்

## அட்டவணை II

(ஒழுங்குவிதி 3)

### அதிகாரசபையால் நிர்ணயிக்கப்பட்டுள்ள கட்டணங்கள்

இவ்வட்டவணையின் I ஆவது நிரலில் காட்டப்பட்டுள்ள ஏதேனும் தொழிற்பாட்டுக்காகச் செலுத்தப்பட வேண்டிய கட்டணங்கள், இவ்வட்டவணையின் II ஆவது நிரலில் நேரொத்த பதிவில் காட்டப்பட்டுள்ள கட்டணத் தொகைகளாதல் வேண்டும்.

| நிரல் I | நிரல் II |
|---|---|
| **செலுத்தவேண்டிய கட்டணத்தொகை** | **ரூ. ச.** |
| 1. அனுமதிப்பத்திரம் ஒன்றுக்கான விண்ணப்பக் கட்டணம் | 1,000.00 |
| 2. தற்காலிக வழி அனுமதிப்பத்திரத்தை நிரந்தரமாக்குதல் : | |
| i. 1 கி.மீ தொடக்கம் 25 கி.மீ. வரை | 50,000.00 |
| ii. 26 கி.மீ தொடக்கம் 50 கி.மீ. வரை | 75,000.00 |
| iii. 51 கி.மீ தொடக்கம் 75 கி.மீ. வரை | 100,000.00 |
| iv. 76 கி.மீ தொடக்கம் 100 கி.மீ. வரை | 125,000.00 |
| v. 101 கி.மீற்றருக்கு மேற்பட | 150,000.00 |
| 3. புதிதாக அனுமதிப்பத்திரம் வழங்கல் - அதிகாரசபையின் கேள்விப் பத்திரமுறைக்கமைவாக. | |
| 4. பயணிகள் சேவை அனுமதிப்பத்திரம் புதுப்பித்தல் கட்டணம் | |
| i. புதுப்பித்தல் கட்டணம் (உரிய திகதிக்குள்) | 10,000.00 |
| ii. புதுப்பித்தல் கட்டணம் (முடிவடைந்த திகதியிலிருந்து 7 நாட்களுக்குள்) | 13,000.00 |
| iii. புதுப்பித்தல் கட்டணம் (முடிவடைந்த திகதியிலிருந்து 7 நாட்களுக்குப் பின்னரும் ஒரு மாதத்திற்குள்ளும்) | 15,000.00 |
| iv. புதுப்பித்தல் கட்டணம் (முடிவடைந்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின்னரும் இரண்டு மாதத்திற்குள்ளும்) | 20,000.00 |
| v. புதுப்பித்தல் கட்டணம் (முடிவடைந்த திகதியிலிருந்து இரண்டு மாதத்திற்குப் பின்னரும் மூன்று மாதத்திற்குள்ளும்) | 25,000.00 |
| vi. புதுப்பித்தல் கட்டணம் (முடிவடைந்த திகதியிலிருந்து மூன்று மாதத்திற்குப் பின்னரும் ஆறு மாதம் வரையும்) ஒவ்வொரு மாதத்திற்கும் ரூபா.5,000.00 வீதப்படி | |
| 5. பயணிகள் சேவை அனுமதிப்பத்திரப் பிரதி பெறல் (சேதமடைந்தால்) | 2,500.00 |
| 6. பயணிகள் சேவை அனுமதிப்பத்திரப் பிரதி பெறல் (தொலைந்தால் / காணாமல்போனால்) | 5,000.00 |
| 7. பயணிகள் சேவை அனுமதிப்பத்திரக் காற்றுத்தடை கண்ணாடிச்சிட்டை பிரதி பெறல் (சேதமடைந்தால்) | 2,000.00 |
| 8. பயணிகள் சேவை அனுமதிப்பத்திரக் காற்றுத்தடை கண்ணாடிச்சிட்டை பிரதி பெறல் (தொலைந்தால்/காணாமல் போனால்) | 2,500.00 |

| | | |
|---|---|---|
| 9. | விசேட சுற்றுலா அனுமதிப்பத்திரம் - ஒரு நாளைக்கு | *200.00* |
| 10. | தற்காலிக அனுமதிப்பத்திரம் - ஒரு நாளைக்கு | *200.00* |
| 11. | வழி அனுமதிப்பத்திரத்தின் உரிமை மாற்றம் | *150,000.00* |
| 12. | அனுமதிப்பத்திரம் உடைய ஒருவர் இறந்துபோனால் சட்டபூர்வமான பின்னுரித்தாளருக்கு (மனைவி அல்லது கணவன் அல்லது பிள்ளைகள்) அவ்வனுமதிப்பத்திரத்தைக் கைமாற்றுதல் | இல்லை |
| 13. | அனுமதிப்பத்திரத்தை குடும்ப அங்கத்தவருக்குள் கைமாற்றம் செய்தல் (மனைவி அல்லது கணவன் அல்லது பிள்ளைகள்) | *50,000.00* |
| 14. | பேரூந்து ஒன்றில் நேரசூசி இணைப்பிரதியை விநியோகித்தல் | *100.00* |
| 15. | சொந்தக்காரர்களின் வேண்டுகோளின் பேரில் நேரசூசி திருத்தப்படுவதற்கு (அதிகாரசபை இணங்கும் போது) பேரூந்து ஒன்றுக்கு | *250.00* |
| 16. | மேலதிகக் கட்டணக் குறிப்பு விநியோகித்தல் | *50.00* |
| 17. | பேரூந்து மாற்றக்கட்டணம் | *10,000.00* |
| 18. | வழி மாற்றற்கட்டணம் | *25,000.00* |
| 19. | மாதாந்த ஓட்டுதல் குறிப்புத்தாள் வழங்கல் (மாகாணத்துக்குள்) | *1,000.00* |
| 20. | பிரவேசக் கட்டணப்பத்திரம் வழங்கல் (மாகாணங்களுக்கிடையில்) | *1,500.00* |
| 21. | மாதாந்த ஓட்டுதல் குறிப்புத்தாள் பெற்றுக்கொள்வதற்கு தாமதித்தல் (மாதம் ஒன்றுக்கு 30% மிகையாக செலுத்தல் வேண்டும்) | |
| 22. | அதிகாரசபை பேரூந்தைப் பரிசோதனை செய்தல் | *2,000.00* |
| 23. | அனுமதிப்பத்திர புத்தகத்தில் திருத்தம் செய்தல் | *1,000.00* |
| 24. | சாரதி, நடாத்துநர் தொழில் அனுமதிப்பத்திரம் பெறல் | *2,500.00* |

**அட்டவணை III**

(ஒழுங்குவிதி 6)

**பயணிகள் சேவை அனுமதிப்பத்திரம்**

வடமாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை

**பகுதி** I

அனுமதிப்பத்திர இலக்கம்: NPRPTA/…………….

1. பேரூந்தின் பதிவு இலக்கம் :………………………………………………………………………………
2. சொந்தக்காரரின்/தொழிற்படுத்துநரின் பெயர் :…………………………………………………………….
   *2.1* விலாசம் :………………………………………………………………………………………………
   *2.2* தேசிய அடையாள அட்டை இலக்கம் / கம்பனியாயின் பெயர் :……………………………………………
3. அனுமதிக்கப்பட்ட சேவை :
   *3.1* வழி இலக்கம் :……………………
   இருந்து :………………………………
   வரை :…………………………………
   ஊடாக :………………………………
   *3.2* பிரயாணத்துக்கான முழுக்கட்டணம் :……………………………………………
   *3.3* அனுமதிக்கப்பட்ட இருக்கைகளின் எண்ணிக்கை :………………………………
4. அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடியாகும் காலம் :
   இருந்து :…………………………………..
   வரை :…………………………………….

*2016 ஆம் ஆண்டின் 01 இலக்க, வடமாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையின் நியதிச்சட்டத்தில் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி மேற்குறிப்பிட்டுள்ள பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர் / தொழிற்பாட்டுக் கம்பனி, இந்த அனுமதிப்பத்திரத்தின் பகுதி* II *இல் கொடுக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கமைய, பயணிகளை ஏற்றிச்செல்ல அனுமதியளிக்கப்பட்டுள்ளது. இவ்வனுமதிப்பத்திரமானது வழங்கப்பட்ட வழி தவிர்ந்த வேறு எந்த வழியிலும் பேரூந்து சேவையில் ஈடுபடமுடியாது.*

*தலைவர்*
வடமாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை

*திகதி* :…………………….

…………………. என்னும் பெயருடைய இந்த அனுமதிப்பத்திரத்தின் சொந்தக்காரர் அல்லது கம்பனியின் பிரதிநிதியாகிய நான், அனுமதிப்பத்திரத்தின் பகுதி I மற்றும் பகுதி II இல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கமைய செயலாற்றுவேன் என இத்தால் உறுதிப்படுத்துகிறேன். அத்துடன் இவ்வனுமதிப்பத்திரம் மாற்றப்படக்கூடியதல்ல என்பதனையும் நிபந்தனைகளை மீறி செயற்படின் இவ்வனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்படும் என்பதனையும் நன்கு அறிவேன்.

திகதி :…………………….. ………………………
கையொப்பம்

**நீடிப்புகள்**

பயணிகள் சேவை அனுமதிப்பத்திர இலக்கம் :- ………………………….…………………..

அனுமதிப்பத்திரம் செல்லுபடியாகும் காலம் :- இருந்து ……………….. வரை ……………….

பற்றுச்சீட்டு இலக்கம் :- ……………………………… திகதி :- ………………………………

சிட்டை இலக்கம் :- …………………………………………………………………………

பிரயாணத்துக்கான முழுக்கட்டணம் :- ……………………………………………………….

திகதி : ……………… …………………………
பொது முகாமையாளர்

**பேரூந்து மாற்றம்**

பேரூந்தின் பதிவு இலக்கம் :- …………………………………………………………..

அனுமதிப்பத்திரம் செல்லுபடியாகும் காலம் :- இருந்து ……………….. வரை ……………..

பற்றுச்சீட்டு இலக்கம் :- ……………………………… திகதி :- …………………………….

சிட்டை இலக்கம் :- …………………………………………………………………….

பிரயாணத்துக்கான முழுக்கட்டணம் :- ……………………………………………………….

திகதி : ……………… …………………………
பொது முகாமையாளர்

**சொந்தக்காரரின் விபரம்**

சொந்தக்காரரின் / தொழிற்படுத்துநரின் பெயர் :-…………………………………………….

விலாசம் :- ………………………………………………………………………………….

தேசிய அடையாள அட்டை இலக்கம் :- ………………………………………………………

அனுமதிப்பத்திரம் செல்லுபடியாகும் காலம் :- இருந்து ……………….. வரை ………………..

பற்றுச்சீட்டு இலக்கம் :- ……………………………………… திகதி :- …………………….

சிட்டை இலக்கம் :- …………………………………………………………………….

பிரயாணத்துக்கான முழுக்கட்டணம் :- …………………………………………………………...

திகதி :- ……………… …………………………
பொது முகாமையாளர்

**வழி மாற்றம்**

வழி இலக்கம் :- ………………………………………………………………………

இருந்து :- ……………………. வரை:- ………………….. ஊடாக:- ………………

பேரூந்தின் பதிவு இலக்கம் :- ……………………………………………………

அனுமதிப்பத்திரம் செல்லுபடியாகும் காலம் :- இருந்து …………. வரை …………

பற்றுச்சீட்டு இலக்கம் :- ……………………………… திகதி :- ……………………

சிட்டை இலக்கம் :- ……………………………………………………………………

பிரயாணத்துக்கான முழுக்கட்டணம் :- ……………………………………………..

திகதி :- ……………… …………………………

பொது முகாமையாளர்

**சாரதி சம்பந்தமான விபரம்**

பெயர் :- ……………………………………………………………………………

மருத்துவ சான்றிதழின் இலக்கம் :- ………………………………………………………

மருத்துவச் சான்றிதழ் காலாவதியாகும் திகதி :- ……………………………..

போக்குவரத்து அதிகாரசபை அடையாள அட்டை இலக்கம் :- ………………………

**நடாத்துநர் சம்பந்தமான விபரம்**

பெயர் :- ……………………………………………………………………………..

தேசிய அடையாள அட்டை இலக்கம் :- ………………………………………………

போக்குவரத்து அதிகாரசபை அடையாள அட்டை இலக்கம் :- ………………………

**அனுமதிக்கப்பட்ட பேரூந்து நிலையங்கள்**

**நேரசூசி விபரங்கள்**

**குறிப்புக்கள் போன்றவை**

## அட்டவணை IV

(ஒழுங்குவிதி 6)

**வடமாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை**

**காற்றுத்தடை கண்ணாடிச்சிட்டை**

அனுமதிப்பத்திர இல :NPRPTA/

பேரூந்தின் பதிவிலக்கம் :

சேவையின் வகை :

வழி இல :

இருந்து :

வரை :

செல்லுபடியாகும் காலம் :

ஊடாக :

திகதி:

…………………………..
பொது முகாமையாளர்

*06-30*